1972 ஆகஸ்ட் 18]

1971-72—

நகர் மன்றங்கள்—

இல்லை.

ஊராட்சி மன்றங்கள்—

பொன்மலை, அன்னவாசல், பழையஜெயங்கொண்ட சோழபுரம்—கட்டிட வேலை நடந்து கொண்டிருக்கிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, துப்புரவுத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டித் தரும் பணிக்கு மத்திய அரசு தொடர்ந்து உதவி செய்கிறதா ? 1972-73-ம் ஆண்டிற்கு எவ்வளவு தொகை ஒதுக்கியுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, மத்திய அரசு தொடர்ந்து உதவி செய்து வருகிறது. 1972-73 ஆண்டிற்கும் ஏறத்தாழ இதே தொகையை ஒதுக்கியிருக்கிறது.

அனாதை இல்லங்கள்

* 161 வினா.—திரு என். கிட்டப்பா : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

தனிப்பட்டவர்கள் அல்லது ஸ்தாபனங்கள் நடத்தும் அனாதை இல்லங்களுக்கு எந்த அடிப்படையில் அரசு அங்கீகாரம் அளிக்கிறது? எந்த அடிப்படையில் அதற்கான மானியம் அளிக்கப்படுகிறது?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அரசு உதவி மானிய விதி தொகுப்பு, படலம் XI -ன்படி, அனாதை இல்லங்கள் ஒவ்வொன்றும் குறைந்தது 30 மாணவர்களைக் கொண்டதும், ஓராண்டு முழுவதும் நன்றாக நடத்தப்பட்டு வருவதாயும், மாணவர்களுக்கு சுகாதார அமைப்புடன் கூடிய இடவசதி, உணவு, தண்ணீர் முதலியன அளிக்கக்கூடியதாயும், அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் கல்வி பயில ஏற்பாடுகள் செய்து தரக்கூடியதாயும் இருத்தல் வேண்டும்.

ஒவ்வொரு ஜூலை முதல் தேதியன்றும் இல்ல மாணவர்களில் 50 சதவீதத்துக்கு மேற்பட்டவர்கள் ஆதரவற்றவர்கள் எனச் சான்றிதழ் கொண்டவர்களாயும், 5 முதல் 20 வயது வரை

யில் உள்ளவர்களாயும், பெற்றோர்களின் ஆண்டு வருமானம் ரூ. 300 க்கு மிகாமலும், ஊனமுற்றோராயிருந்தால் 5 முதல் 25 வயது வரை உள்ளவர்களாயும், பெற்றோர்கள் ஆண்டு வருமானம் ரூ. 600-க்கு மிகாமலும் இருக்க வேண்டும்.

ஆண்டுதோறும் ஆகஸ்ட் முதல் தேதிக்குள் மாவட்டக் கல்வி அலுவலர் மூலம் அனுப்பப்படும் விண்ணப்பங்களை, அரசு அங்கீகாரத்துக்கும், மானியத்துக்கும் பள்ளிக் கல்வி இயக்குநர் பரிந்துரை செய்வார். மேற்கண்ட இல்லங்களை ஆய்வு செய்து, சமவெளியில் உள்ள இல்லமாயின் தகுதியுள்ள மாணவனுக்கு, ஒரு மாதத்துக்கு ரூ. 12 என்ற அளவிலும், மலைப் பிரதேசத்தில் உள்ள இல்லமாயின் ரூ. 18 என்ற அளவிலும் கணக்கிட்டு, இல்லத்தின் நிகரச் செலவில் நான்கில் மூன்று பகுதியையும் கணக்கிட்டு இரண்டில் எது குறைந்த தொகை கொண்டதாக உள்ளதோ, அதை அவ்வாண்டு மானியமாக வழங்கப்படும்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, தமிழகத்தில் தனிப்பட்டவர்கள் அல்லது ஸ்தாபனங்கள் மூலம் நடத்தப்படும் அனாதை இல்லங்களின் எண்ணிக்கை எவ்வளவு? அதற்காக ஆண்டுதோறும் அரசாங்கம் ஒதுக்கும் மானியம் எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இது வரையில் அங்கீகாரம் பெற்று இயங்கிக் கொண்டு வருகிற அனாதை இல்லங்களின் எண்ணிக்கை 372. எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்ற விவரம் தற்சமயம் இல்லை.

திரு என். ராஜாங்கம் : சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அனாதைக் குழந்தைகளைப் பொறுத்தவரையில் தாய், தகப்பன் யாராவது ஒருவர் இருந்து, அவருடைய வருமானம் ஆண்டு ஒன்றுக்கு 300 ரூபாய்க்கு அதிகமாக இருக்கக்கூடாது என்பது விதி. இந்த விதி ஆரம்ப காலத்தில் அனாதை விடுதிகள் முதன் முதலில் ஏற்பட்டபொழுது செய்யப்பட்ட ஒரு விதி. ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் சம்பாதித்தால் கூட 360 நாட்களுக்கு ரூ. 360 வந்துவிடும். ஆகவே, இந்த விதியைத் தளர்த்தி ரூ. 300-க்கு மேற்பட்டு ரூ. 400-க்கு உள்ளாக ஆண்டு வருமானம் இருந்தால் கூட அனாதைக் குழந்தைகளாகக் கருதப்படுவார்கள் என்பதைக் கவனித்து அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

1972 ஆகஸ்ட் 18]

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இதற்கு முன்னர் மாணவர் ஒருவருக்கு ரூ. 10 கொடுக்கப்பட்டு வந்தது. இப்பொழுது தான் 1968-69 முதற்கொண்டு அது 12 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆண்டு வருமானம் ரூ. 300 என்று இருப்பதை 400 ஆக்குகின்ற உத்தேசம் தற்சமயம் இல்லை.

Price of pulses

*162. Q.—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether the Government are aware of the upward trend in pulses market in this State during May 1972; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) துவரம் பருப்பு, பச்சைப் பருப்பு, உளுத்தம் பருப்பு, கடலைப் பருப்பு ஆகியவற்றின் விலை 1971 மே திங்களிலிருந்து ஓராண்டுக் காலத்தில் 20 சத விகிதம் உயர்ந்துள்ளது. பிற மாநிலங்களில் பருப்பு உற்பத்தி குறைந்து, அதன் காரணமாக நமது மாநிலத்திற்கு வரும் பருப்பு வகைகளின் அளவு குறைந்தமையாலும் போக்குவரத்து இடர்பாடுகள் காரணமாகவும் பருப்பு விலைகள் உயர்ந்தன.

திரு. என். டென்னிஸ்: அரசு இதன் விலையை நிர்ணயம் செய்து ஃபேர் பிரைஸ் ஷாப் ஏற்படுத்துவதன் மூலம் இதன் விலையைக் குறைக்க முடியும் என்று எதிர்பார்க்கிறதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: எப்.சி.ஐ. விற்கின்ற பருப்பு வகைகளை அரசாங்கம் கேட்டுக்கொண்டிருக்கிறது. அவர்கள் கொடுத்தால், அதை இருக்கிற நியாய விலைக் கடைகள் மூலம் விநியோகிப்பதற்கு அரசு உத்தேசம் செய்திருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இது அத்தியாவசிய பண்டங்களில் உட்பட்டிருக்கிற காரணத்தினால் இதன் விலையைக் கட்டுப்படுத்துவதற்கு ஏதாவது பரிந்துரை நமது அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா? அப்படி வந்திருந்தால் அதன் கீழ் ஏதாவது நடவடிக்கை மத்திய அரசோடு தொடர்பு கொண்டு எடுக்கப்பட்டிருக்கிறதா?